*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 423- 428, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

RESEARCH ARTICLE

# தமிழ் பிராமி கல்வெட்டுகள் பற்றி ஓர் வரலாற்றுஆய்வு

**முனைவர்.சி.நவீனாதேவி**
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை, சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர். 1*

***ஆய்வு சுருக்கம்***

இந்தியாவில் தான் கல்வெட்டுகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கல்லில் மட்டும் இல்லாமல் களிமண் பலகைகள், உலோகம், தந்தம், சங்கு, மட்கலன்கள். சுடுமண்பொம்மைகள், மரம், கோரைத்தாள் ஆகியவற்றின் மீதும் தொன்மைக் காலத்தில் எழுதப்பட்டன.

***சிறப்புச் சொற்கள்:*** *சிலாசாசனம், தொல்லியல், நடுக்கற்கள், கல்வெட்டின் வாசகங்கள், இலக்கியக் கல்வெட்டு*

## முன்னுரை

நம்நாட்டின் தொன்மை வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் தொல்லியல் சான்றுகளில் ஒன்று கல்வெட்டுகள் ஆகும். கோவில் முதலிய பொதுக் கட்டிடங்களின் கவர்களிலும், பாறைகளின் மீதும், கல்துண்களிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம். அவ்வாறு எழுதப்பட்டிருப்பதுதான் சிலாசாசனம் அல்லது கல்வெட்டு எனப்படும். பண்டையகால கல்வெட்டு எழுத்துக்களை அறிந்து அவற்றின் பொருளை விளக்கும் கலையே கல்வெட்டியல் எனப்படும்.

கல்வெட்டுகள் நம்நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கு முக்கியமான முதல்நிலைச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. பண்டைய மனிதனின் வரலாற்று அறிவைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கிரேக்கம், மெசபட்டோமியா, நைல்நதிக்கரை, சீனா. மாயன், அஸ்தெக், இந்தியா போன்ற பகுதிகளிலிருந்த நாகரிகங்களை அறியக் கல்வெட்டுகள் பேருதவி புரிகின்றன.

## தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

அசோகர் காலத்திற்கு முன்னரே சமணத்துறவிகள் வடநாட்டிலிருந்து தெற்கு நோக்கி வந்த போது மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தாங்கள் தங்கிய குகை படுக்கைகளில் தமிழ்மொழியில் சிறிய, சிறிய கல்வெட்டுகளைப் பொறித்தளர் முற்காலத்தில் கல்லில் எழுதுவதைத் தமிழ் மக்கள் இயல்பாகக் கருதவில்லை. இறந்தவர் அதிலும் வீரத்துடன் இறந்தவர்களுக்காக நடுகல் நாட்டி இறந்தவரின் பெயரையும் பெருமையையும் எழுதிவந்தார்கள். அழியக்கூடிய மற்ற பொருள்களிலும் மட்பாண்டங்களிலும் அவர்கள் எழுதினார்கள். எனவே சமணரல்லாத தமிழரும் முதன்முதலில் நடுகல்லில் எழுதியவை நமக்கு கிடைத்துள்ளது.

பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு சோழ நாட்டிலும், பாண்டி நாட்டிலும், முறையாகக் கற்கோவில்கள் தோன்ற ஆரம்பித்தன. இக்கோவில்களில் கற்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. எனவே கி.பி. 7-ம், 8-ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டு வரலாறு முழுவதையும் கல்வெட்டுகள் மூலமாக அறிய முடியவில்லை. கி.பி. 7-



*©2023 by* KRISHMA PUBLICATION

ம் நூற்றாண்டு வரை காணப்பட்ட சில கல்வெட்டுகள். தமிழிலும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

**மாங்குளம் கல்வெட்டு**

**கல்வெட்டின் இருப்பிடம் :**

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் ஒரு குறுக்கு சாலை வழியாகச் சென்று மீண்டும் அதிலிருந்து ஒரு வண்டிப் பாதை வழியாகச் சென்றால் மீனாட்சிபுரம் என்ற ஊரை அடையலாம். இந்த ஊர் மலையடிவாரத்தில் உள்ளது. இந்த ஊரிலிருந்து அரிட்டாபட்டி என்ற ஊர் வரை ஐந்து மைல் நீளத்திற்கு ஒரு மலைத் தொடர் தெற்கு வடக்காக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் இந்த மலை முழுவதும் அரிட்டாபட்டி ஊரைச் சார்ந்ததாகக் கருதப்பட்டது. தற்சமயம் வடபகுதி அரிட்டாபட்டியையும் தென்பகுதி மீனாட்சிபுரத்தைச் சார்ந்ததாகவும் குறிக்கப்படுகிறது. இந்த மலையில் உள்ள கல்வெட்டுகளுக்கு அருகில் இருப்பது மீனாட்சிபுரமே இக்கல்வெட்டுகள் மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றும் அரிட்டாபட்டி கல்வெட்டுகள் என்றும் அழைக்கப்படுகிறது.

**மாங்குளம் கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள்**

கழுகு மலை அல்லது ஓவா மலை என்று அழைக்கப்படும் இந்த மலையின் கிழக்குப் புறத்தில் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களில் சில கற்படுக்கைகள் இருக்கின்றன. மேலும் பாறையின் மேற்புறத்தில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மொத்தம் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இவைகள் படியெடுக்கப்பட்டு 1906- ஆண்டுக்கான கல்வெட்டுத் தொகுப்பில் 460-465-ம் எண்களுடன் வெளியிடப்பட்டன.

**முதலாம் கல்வெட்டு**

**கல்வெட்டில் காணப்படும் எழுத்து**

கணிய நந்த அ ஸிரிய இகுவ் அன் கே
தம்மம் இத்த அ நெடுஞ்செழியன் பண அன்
கடல்அன் வழுத்திய் கொட்டுபித்த அ பளி இய்

**திருத்தமான வடிவம்**

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு தர்மம் ஈத்த நெடுஞ்செழியன் பணவன் கடலன் வழுதி கொட்டுவித்த பள்ளி

**விளக்கம்**

கணியாகிய நந்தஸ்ரீ இயக்குவனுக்கு நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் ஒரு பள்ளி (கற்படுக்கை) செதுக்குவித்தான்.

**இரண்டாம் கல்வெட்டு**

கணிய நந்த ஸிரிய்க்கு அன் தமம் இத நெடுஞ்செழியன் ஸலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் செகிய பணிய்

**திருத்தமான வடிவம்**

கணிநந்த ஸ்ரீ இயக்குவனுக்கு தர்மம் ஈத்த நெடுஞ்செழியன்.

ஷலகன் இளஞ்சடிகள் தந்தைசடிகன் செய்த பள்ளி

**விளக்கம்**

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு நெடுஞ்செழியனது சலகனும் இளஞ்சடிகளது தந்தையும் ஆகிய சடிகன் ஒரு பள்ளி செதுக்குவித்தான்.

**மூன்றாம் கல்வெட்டு**

கணி இ நந்தஸிரிய் குவ
வெள் அறைய் நிகமது காவிதி இய்
கழிதிக அந்தை அஸிதன்.
பின ஊ கொடுபிதோன்

**திருத்தமான வடிவம்**

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்குத் வெள்ளறை நிகமத்துக் காவிதி கழிதிக அந்தையது அதன் பிணவூகொட்டுவித்தோன்

**விளக்கம்**

கணி நந்தஸ்ரீ இயக்குவனுக்கு வெள்ளறை நிகமத்தைச் சார்ந்த காவிதி அழிதக அந்தையின் மகனான் பிணவூ என்பவன் ஒரு பள்ளி செதுக்குவித்தான்.

**நான்காம் கல்வெட்டு**

சந்தரி தன் கொடுபிதோன்
விளக்கம் :சந்தரி தன் கொட்டுவித்தோன்
ஐந்தாம் கல்வெட்டு
வெள் அறை நிகமதோர் கொடி ஓர்
விளக்கம்: வெள்ளறை நிகமத்தோர் கொட்டினோர்
செய்தி: வெள்ளறை நிகமத்தோர் ஒரு பள்ளி செதுக்கு வித்தனர்.

**இக்கல்வெட்டுகளில் காணப்படும் கருத்து**

சமண சங்கத்தைச் சேர்ந்தவர்களை கணி என்று குறிப்பிடுவது வழக்கம். எனவே இக்கல்வெட்டில் கணி என்று குறிக்கப்பட்டுள்ளது. நந்த ஸிரியக்குவன்

(இயக்கன்) என்வருக்கு நெடுஞ்செழியன் பள்ளியமைத்தும் கொடுத்ததை முதற்கல்வெட்டு குறிக்கிறது. கே தம்மம் என்றால் அவருக்குக் கொடுக்கப்பட்டது என்று பொருள். கே என்பது நான்காம். வேற்றுமை உருபு ஆகும்.

இரண்டாம் கல்வெட்டு அதே பெரியருக்கு நெடுஞ்செழியனின் சாலகன் இளஞ்சடிகனின் தந்தைசடிகன் என்பான் பள்ளி செய்வித்ததைக் குறிக்கிறது. மூன்றாவது கல்வெட்டு அதே பெரியாருக்கு வெள்ளரை நிகமத்தைச் சேர்ந்த காவிதிகழிதிக அந்தை என்பவரின் மகன் பிணவு என்பவன் கொடுத்ததைக் குறிக்கிறது. சந்தரிதன் என்பவனும் வெள்ளறை நிகமத்தோரும் தானம் கொடுத்ததை மற்ற இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**சித்தன்னவாசல் கல்வெட்டு**

சித்தன்னவாசல் புதுக்கோட்டையிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. இந்த ஊர் தமிழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த ஊராகும். இங்கு மலையைக் குடைந்து தோற்றுவிக்கப்பட்ட குகைக் கோவில் ஒன்று உள்ளது. இதில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஓவியங்கள் இருக்கின்றன. இந்த ஓவியங்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஸ்ரீமார ஸ்ரீவல்லவன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இது ஒரு சமணக்குகை ஆகும். இதே மலையில் சற்று தொலைவில் மறு புறத்தில் ஏழடிப்பட்டம் என்ற ஒரு பகுதி உள்ளது. அங்கு இயற்கையாக அமைந்த ஒரு குகைத்தளம் உள்ளது. அங்கு சில கற்படுக்கைகள் இருக்கின்றன. ஒரு கற்படுக்கையின் பக்கவாட்டில் இந்த கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு செய்தி :**

எருமை நாட்டில் குமிழூரில் பிறந்த காவிதி ஈதேன் என்ற சமணத் துறவிக்கு சிறுபோ என்ற ஊரில் அவனது தம்பிமார்கள் ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தனர் என்பது இக்கல்வெட்டில் கூறப்பட்ட செய்தியாகும்.

எருமைநாடு என்பது தற்போது மைசூர் நாடு என்று வழங்கப்படுகிறது. காவிதி என்பது வணிகருக்கு உரிய பட்டமாகும். சிறுபோ என்பது தற்போது சித்தன்னவாசல் என்று வழங்கப்படுகிறது. குளையர் என்பது தம்பிமார் என்றும். அதிட்டானம் என்பது இடம் என்றும் பொருள்படும். இங்கு அதிட்டானம் என்பது கற்படுக்கையைக் குறிக்கிறது.

இந்தக் கல்வெட்டில் குமிழூர், ஈதேனுக்கு, அதிட்டானம் போன்ற சொற்கள் குமிழ் ஊர், ஈதேன்கு, அதிட் அனம் என்று பிரித்து எழுதப்பட்டிருக்கும் முறை காலப் பழமையைக் குறிக்கிறது. மேலும் எருமை, காவிதி என்ற சொற்கள் எருமி. காவுடி எனச் சிதைந்து சொல்லுருவங்களாக அமைந்துள்ளன.

இவை தவிர சித்தன்னவாசலில் பிற்காலத்தைச் சேர்ந்த அதாவது கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துக்களில் தொழுக் குன்றத்துக் கடவுளன். திருநீலன், திருப்பூரணன். ஸ்ரீபூரண சந்திரன், நியத்தகரன், பட்டகாளி போன்ற பெயர்களும் பொறித்து வைக்கப்பட்டுள்ளன.

**அழகர் மலை கல்வெட்டுகள்**

அழகர் மலை பழமுதிர்ச் சோலை என்றும் புகழப்படுகிறது. இந்த மலையின் ஒரு பகுதியில் இயற்கையாக அமைந்த குகைத் தளம் உள்ளது. இதைக் கிடாரிப்பட்டி என்ற ஊரில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவு நடந்து சென்று தான் அடைய முடியும். மலையில் ஏறிச் சென்று பார்ப்பதற்கு வசதியாக படிகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இயற்கைக் குகைத் தளத்தில் கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இங்கு நல்ல அணை ஒன்றும் உள்ளது. படுக்கை இருக்கும் தளத்திலிருக்கும் பாறை முகப்பிற்கும் உயரம் மிக அதிகம். முகப்பின் புறத்தே நீண்ட பண்டையக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. படுக்கையின் ஓரத்திலும் ஒரு கல்வெட்டு உள்ளது. மேலே உள்ள கல்வெட்டுகள் மிகவும் உயரத்தில் இருப்பதால் படிப்பது மிகவும் கடினம். இந்தக் கல்வெட்டுகள் தமிழ் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. இவை கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகிறது.

கல்வெட்டு எழுத்துக்கள்

1. மாத்திரைய் பொன் கொலவன் ஆதன் அ தான
2. ……அனாகன் த..........
3. கணிநாதன் கணீய் நதன்
4. மாத்திரைய் கே
5. ஊபு வணிகன் வியகன் கணிதிகன்
6. கனக அதன் மகன் அதன் அ தான்
7. ஸபமதி இன் போ மித்தி
8. பணித வணிகன் நெடுமலன்
9. கொளு வணிகன் எள சந்தன்
10. ஞ்சி கழுமாறன் தான
11. தார அணி இ கொடுபித அவன்
12. காஸபன் அதவிர
13. ....அவரும் குடுபிதோ....
14. வெண் பளிய் அறுலை வணிகன் என அ அடன்
15. …… தியன் சந்தன்

இந்தக் கல்வெட்டுகளின் இடையில் பல பகுதிகள் தேய்ந்து போய்விட்டன. எனவே மேலே குறிப்பிடப்பட்டவை தற்காலிகமாகப் படிக்கப்பட்டவையே ஆகும். ஆனாலும் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

மதுரையைச் சேர்ந்த பல வணிகர்கள் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்றனர். பொற் கொல்லன், உப்பு வணிகள், அறுவை வணிகன், பனரித வாணிகன். கொழு வணிகன் முதலியோர் குறிக்கப்படுகின்றனர். இதிலிருந்து மதுரையைச் சேர்ந்த செல்வந்தர்கள். சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

மேலும் மேற்கண்ட அழகர்மலைக் கல்வெட்டிலிருந்து அக்காலத்திலேயே பொற்கொல்லர், உப்பு வணிகர், சர்க்கரை வணிகர், துணி வணிகர் போன்ற பல தரப்பட்ட பிரிவினர் சமுதாயத்தில் வாழ்ந்து வந்தனர் என்று தெரிய வருகிறது. சந்நியாசிகளான பெண் துறவிகளும் இருந்தனர். தானங்கள் பலரால் இணைந்து தரப்பட்டது. துறவிகள் தங்குமிடங்களில் நீர் ஒதுக்கிச் சென்று ஒரே இடத்தை அடைய வசதி செய்து கொடுத்தனர். இது அக்காலத்திய மக்களின் அறிவியல் மேம்பாட்டுக்கு சான்றாகும். மேலும் பல தொழில்களில் மக்கள் தனித் தனியாக ஈடுபட்டு வந்தனர் என்றும் தெரிகிறது.

இந்த அழகர்மலைக் கல்வெட்டுகளுக்கு அருகில் உள்ள பாறையில் தீர்த்தகரன் சிலை ஒன்றும் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும் உள்ளன. அருகர் மலை என்பதே அழகர் மலை என்று மாறி இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

**புகளூர் கல்வெட்டு**

திருச்சி மாவட்டம் கருவூரிலிருந்து பத்துமைல் தூரத்தில் உள்ள புகளூரில் ஆறு நாட்டார் மலை என்ற மலை ஒன்று உள்ளது. மலையடி வாரத்தில் வேலாயுதபாளையம் என்ற ஊர் உள்ளது. மலையின் மீது முருகப் பெருமான் கோவில் ஒன்று உள்ளது. மலையின் தென்புறத்திலும் வடபுறத்திலும் இயற்கை குகைத் தளங்கள் அமைந்திருக்கிறது. இந்த குகைத் தளங்களில் கற்படுக்கைகளும் கல்வெட்டுகளும் காணப் படுகின்றன. இவை வரலாற்றுப் புகழ் மிக்கவை ஆகும். இதில் வடபுறம் உள்ள குகைத்தளத்தில் ஒரே ஒரு கல்வெட்டு மட்டுமே உள்ளது. தென்புறக் குகைத்தளத்திலிருந்து வடபுறக் குகைத்தளம் செல்லும் வழியிலும் பல கற்படுக்கைகள் உள்ளன. ஆனால் அவைகளில் கல்வெட்டு எதுவும் காணப்படவில்லை. இக்கல்வெட்டுகள் கி.பி. முற்பகுதி அல்லது மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும்.

***1.ணு கன் மகன் ளங்கீரன்***

அதாவது அங்குள்ள கற்படுக்கை நாகன் என்பவனின் மகனான இளங்கீரன் என்பவனால் செய்து கொடுக்கப்பட்டது என்ற செய்தி தெரியவருகிறது.

**தென்புறம் உள்ள கல்வெட்டு**

தென்புறக்குகைத்தளத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. பக்கவாட்டிலும் மேலே உள்ள பாறையின் முகப்பிலும் உள்ள இருகல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவைகளாக உள்ளன. தமிழகத்தின் சங்க கால வரலாற்றிற்கு இவை மிகவும் இன்றியமையாத கல்வெட்டுகளாகும்.

1) மூதா அமண்ணன் யாற்றூர் செங்கோயபன்
கோ ஆ -ல்லிரும் பொறை மகன் பெருங்
கடுங்கோன் மகன் கடுங்கோன் லங்கடுங்
கோளங்கோ ஆக சுறுபித கல்

2)... தா அண்ணன் யாற்றூர் செங்காய பன் உயைற்
கோ ஆதன் சொல்லிரும் பொறை மகன்
பெருங்கடுங்கோன் மகன் எங்
கடுங்கோ எங்கோ ஆகி அறுத்த கல்

மூத்த அமணனாகிய யாற்றூர்ச் செங்காயபன் என்ற துறவி உறைவதற்காகக் கோ ஆதன் சேரல் இரும்பொறையின் போதும் பெருங்கடுங்கோவின் மகனும் ஆகிய இளங்கடுங்கோன் என்பவன் தான் இளங்கோ ஆவதற்காக பெருங்கற்படுக்கை செய்து கொடுத்தான் ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டுகளைப் பற்றிய விளக்கம்**

புகளூர் கல்வெட்டுகளில் சேர மன்னர்களுடைய மூன்று தலைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளது. சிறந்த வரலாற்றுச் செய்தியாகும்.
அவர்கள் வருமாறு

1. கோ ஆதன் சொல்லிரும்பொறை
2. பெருங்கடுங்கோன்
3. இளங்கடுங்கோன்

இவர்கள் தந்தை மகன் என்ற உறவில் குறிக்கப்படுகின்றனர். இவற்றில் கோ,இரும்பொறை, ஆதன் என்ற பெயர்கள் வருவதால் இதில் குறிப்பிட்டுள்ளவர்கள் சேரர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

அரசர் குலத்தில் மூன்று தலை முறைகளைக் குறித்துள்ள மிகவும் தொன்மையான கல்வெட்டுகள் இவை ஆகும். இவற்றின் உதவியுடன் வரலாற்றை ஒருவாறு கணிக்கலாம்.

இக்கல்வெட்டுகளில் ஆதன் என்றும் செல் என்றும் பெயர் கொண்டவன் சங்க காலச் சேரர்களில் செல்வக் கடுங்கோ வாழியாதவன் என்ற மன்னன் ஆவாள். இவன் பதிற்றுப் பத்தின் பாட்டுடைத் தலைவன் ஆவான். இனி பெருங்கடுங்கோள் இளங்கடுங்கோன் என்று குறிக்கப்பட்டவர்கள் முறையே பெருஞ்சேரலிரும்பொறையும்,இளஞ்சேரலிரும்

பொறையும் ஆவார்கள். இவர்கள் பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்து. ஒன்பதாம் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்கள் ஆவார்கள். பதிற்றுப் பத்தில் இளஞ்சேரலிரும்பொறையின் தந்தை பெயர் குட்டுவன் இரும்பொறை எனக் குறிக்கப்படுகிறது. ஆனால் கல்வெட்டில் இளங்கடுங்கோனின் தந்தை பெயர் பெருங்கடுங்கோன் என்று குறிக்கப்படுகிறது.

இங்கு கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்களுக்கும் இலக்கியத்தில் குறிக்கப்படுவோரின் பெயர்களுக்கும் உள்ள ஒற்றுமை கண்டு இருவரும் ஒருவரே என்று கூறுவது போற்றுதற்குரிய முயத்தி தான். ஆனால் இவர்கள் பதிற்றுப் பத்து கொண்ட சேர மன்னர்களே என்று முடிவாகக் கூறுவதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. எனவே நன்கு ஆராய்ந்த பிறகு தான் முடிவு செய்ய முடியும்.

**புகளூர் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து மற்றும் சொல்**

புகளூர் கல்வெட்டுகளில் எழுத்துக்கள் வளர்ச்சி பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. 'அ' எழுத்து இடைவெளியின்றி சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. உயிர் மெய்யில் சிகரத்தைக் குறிக்கும் குறி வளையத் தொடங்குகிறது. 'ந' வளர்ச்சி பெற்றுக் காணப்படுகிறது. மூன்று போன்ற சொற்களில் மெய்யைச் குறிக்க புள்ளி காணப்படுகிறது.

இந்த கல்வெட்டில் மூத்த என்ற பொருளில் மூதா என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. அமணன் என்பது அமண்ணன் என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் இரும்பொறை என்பது மற்றொரு கல்வெட்டில் இரும்புறை என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு பல வழிகளில் புகளூர் கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு பெற்று விளங்குகிறது.

**அரச்சலூர் கல்வெட்டு**

ஈரோட்டிலிருந்து பன்னிரெண்டு மைல் தொலைவில் காங்கேயம் செல்லும் பாதையில் அரச்சலூர் என்ற கிராமம் உள்ளது. இந்த ஊரின் எல்லையில் சாலையோரமாக நாகமலை என்ற மலை உள்ளது. இதில் ஆண்டிப்பாறை என்ற பகுதி உள்ளது. அங்கு பாண்டியர் குழி என்ற பகுதியில் பண்டைய எழுத்துக்கள் உள்ள குகைத்தளம் உள்ளது. இதிவு தமிழி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இவையே புகழ் பெற்ற அரச்சலூர் கல்வெட்டு என்று அழைக்கப்படுகிறது.

அரச்சலூர் கல்வெட்டுகள் அக்காலத்தில் நிலவிய இசையின் மேன்மையை எடுத்துக்காட்டும் மணி விளக்காகத் திகழ்கிறது. மேலும் இக்கல்வெட்டின், சிறப்புத் தன்மை என்னவென்றால் தமிழி எழுத்து எவ்வாறு தமிழாகவும் வட்டெழுத்தாகவும் வளர்ச்சியடையத் தொடங்கியது என்பதற்குச் சான்றாக சில தமிழ் வட்டெழுத்துக்கள் இக்கல்வெட்டில் காணப்படுவதாகும். இக்கல்வெட்டு கி.பி மூன்றாம். அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. 1936-37ம் ஆண்டுகளில் இவை படியெடுக்கப்பட்டு கல்வெட்டுத் தொகுதியில் 136-ம் எண்ணில் வெளியிடப்பட்டுள்ளது. அரச்சலூர் கல்வெட்டை இசைக் கல்வெட்டு என்று குறிப்பிடலாம்.

**கல்வெட்டின் வாசகங்கள் :**

அரச்சலூரில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதல் இரண்டு கல்வெட்டுகளில் ஐந்து எழுத்துக்களைக் கொண்ட ஐந்து வரிகள் உள்ளன. மூன்றாவது கல்வெட்டில் இரண்டு வரிகள் உள்ளன.

**முதல் கல்வெட்டு :**

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

**இரண்டாம் கல்வெட்டு :**

| | | | | |
|---|---|---|---|---|
| கை | தா | தை | த | கை |
| த | தை | த | தை | த |
| தை | த | தை | த | தை |
| த | தை | த | தை | த |
| கை | த | தை | த | கை |

இதில் முதல் கல்வெட்டு ஒரு வரிக்கு ஐந்து எழுத்தாக ஐந்து வரிகள் உள்ளன. இரண்டாவது கல்வெட்டும் அவ்வாறே ஒரு வரிக்கு எழுத்தாக ஐந்து வரிகள் கொண்டுள்ளன. இவற்றை இடமிருந்து வலமாகப் படித்தாலும், மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ எப்படிப் படித்தாலும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதைக் காணலாம். இந்தக் கல்வெட்டுகள் சொற்களாகவோ சொற்றொடராகவோ அமையாமல் இசைக் குறியீட்டு எழுத்துக்களாகவே அமைந்துள்ளன. எனவே இவை இசைத் துறையிலும் கூத்துத் துறையிலும் பாடக் கூடிய எழுத்துக்களை நமக்கு நினைவுறுத்துகின்றன.

**மூன்றாம் கல்வெட்டு :**

எழுத்துப் புணருத்தான் மணிய்
வுண்ணக் கன் தேவன் சாத்தன்

ஏழுதாளம் பணிவித்தான் என்றும் சித்தம் தீர்த்தம் பூணத் தந்தான் என்றும் வெவ்வறே வகையாகப் படித்தார்கள். ஆனால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் எழுத்துப் புணருத்தான் என்று திருத்தமாகப் படித்தார்கள். புணருத்தான் என்பது தொகுத்தான் அல்லது சேர்த்தான் என்று பொருள்படும். இரண்டு கல்வெட்டுகளில் உள்ளவாறு இசைக் குறியீட்டு எழுத்துக்களைத் தொகுந்தவன் என்பதாகும்.

### தமிழ் வட்டெழுத்தின் தொடக்கம்

அரச்சலூர்க் கல்வெட்டின் மற்றுமொரு சிறப்புத் தன்மை என்னவென்றால் தமிழி எழுத்து எவ்வாறு தமிழாகவும். வட்டெழுத்தாகவும் வளர்ச்சியடையத் தொடங்கியது என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது. இக்கவெட்டிலுள்ள 'ம' கரம் 'ண' கரம் முதலிய எழுத்துக்கள் வட்டெழுத்தின் தொடக்கமாக அமைந்துள்ளன. மற்ற எழுத்துக்கள் தமிழ் எழுத்தின் தொடக்கமாக விளங்குகின்றன. இவ்வாறு தமிழும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்படும் வழக்கின் தொடக்கத்தைக் காட்டுவதாகவும் அரச்சலூர்க் கல்வெட்டு அமைந்துள்ளது.

இவ்வாறு அரச்சலூர்க் கல்வெட்டு பல வகைகளில் சிறப்புமிக்கதாகக் காணப்படுகிறது.

### முடிவுரை

தற்கால தமிழ் எழுத்துக்கு முன்னோடியாக விளங்கிய எழுத்துக்களே தமிழி அல்லது தமிழ் பிராமி எழுத்துக்கள் என்று அழைக்கப்படுகிறது. இந்த எழுத்துக்கள் தான் தமிழகத்தில் கிடைத்துள்ள மிகவும் தொன்மையான எழுத்துக்கள் என்று அழைக்கப்படுகிறது. தமிழகத்தின் வட பகுதியிலிருந்து தென் பகுதி வரை பல இடங்களில் தமிழி எழுத்துகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், பானைகள், காசுகள் போன்றவை கிடைத்துள்ளன. தமிழகத்தில் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானதாகக் கருதப்படுவது மாங்குளம் கல்வெட்டு சித்தன்னவாசல் கல்வெட்டு, அழகர்மலைக் கல்வெட்டு. புகளூர் கல்வெட்டு, அரச்சசலூர்க் கல்வெட்டு ஆகியவையாகும். கல்வெட்டுகள் மூலமாக நாம் வரலாற்றுச் செய்திகளை தெரிந்துக் கொள்கிறோம்.

### அடிக்குறிப்புகள்:


1. *கல்வெட்டுகள் கூறும் உண்மைகள், தி.வை.சதாசிவ பண்டாரத்தார், ராமையா பதிப்பகம்.*
2. *தமிழ்நாட்டு கல்வெட்டு, தொகுதி 4, தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை.*
3. *கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்,துரை சுந்தரம்,தமிழ் மரபு அறக்கட்டளை.*
4. *கல்வெட்டும் கல்வெட்டியலும், வெள்ளை வாரணம்.*
5. *முப்பது கல்வெட்டுகள், சுந்தரேச வாண்டையார், அறிவுப் பதிப்பகம்.*
6. *பாண்டியர் செப்பேடுகள் பத்து,உலக தமிழ் ஆராய்ச்சி.*
7. *கல்வெட்டியல், நாகசாமி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.*
8. *கல்வெட்டு ஒரு அறிமுகம், தாமோதரன்*
9. *கன்னியாகுமரி கல்வெட்டுகள்., நடன காசிநாதன்,*
10. *கல்வெட்டு சொல்லும் செய்திகள்,குடவாயில்.*


*****